முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

அசல் வழக்கு எண். **29/2022**

2024-ம் வருடம் டிசம்பர் திங்கள் 06-ம் நாளன்று வாதி சாட்சியாக பி.வா.சா.5-வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.ராமகிருஷ்ணன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | : தமிழரசு சுப்பிரமணியன் | தொழில் | : |
| த/பெ. | : | வட்டம் | : |
| முகவரி | : | மதம் | : |
| ஜாதி | : | வயது | : |

முதல் விசாரணை:-

நான் தற்போது DBS வங்கி, கரூர் மேற்கு கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு லெட்சுமி விலாஸ் வங்கி என்று இயங்கி வந்த வங்கி, எங்கள் வங்கியுடன் இணைந்து, DBS வங்கி என செயல்பட்டு வருகிறது. நீதிமன்ற அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதற்காக ஆவணங்களுடன் முன்னிலையாகியுள்ளேன்.

அழைப்பாணையில் கேட்டுள்ள, எங்கள் கிளை வங்கி கணக்கு எண். 0363301000032577 எண்ணிற்கு வழங்கப்பட்ட காசோலை எண். 000072 அசல் காசோலையை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். மேற்சொன்ன காசோலை எங்கள் வங்கியின் வாடிக்கையாளர் P.K.செல்வம் என்பவரின் மேற்சொன்ன சேமிப்பு கணக்கிற்கு வழங்கப்பட்ட காசோலையாகும். மேற்சொன்ன காசோலை ரூ.3,00,000/-க்கு 04.07.2020 அன்று K.அருண் என்பவர் பெயருக்கு வரையப்பட்டு, 04.07.2020 அன்றே எங்கள் வங்கியில் நேரடியாக வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளது. மேற்சொன்ன அருண் என்பவர் காசோலையின் பின்புறம் கையெழுத்திட்டு, அவருடைய செல்போன் எண்.94474 78362

என்ற செல்போன் எண்ணையும் எழுதி, காசோலைக்குரிய பணத்தை பெற்றுக்கொண்டுள்ளார். அந்த செல்போன் எண்ணில் ஐந்தாவது இலக்கமான 4 என்ற எண் திருத்தி எழுதப்பட்டுள்ளது. மேற்சொன்ன காசோலை மற்றும் அதன் பின்பக்கத்துடன் சேர்த்து சா.சா.ஆ.3.

<u>குறுக்கு விசாரணை</u>

சா.சா.ஆ.3 காசோலையை பற்றி எனக்கு நேரடி விவரம் தெரியாது. நான் 2023 ஆகஸ்ட் முதல் தற்போதைய கிளையில் பணிபுரிந்து வருகிறேன். காசோலையை வசூலுக்கு கொடுத்த நபரின் அடையாளத்தை உறுதி செய்வதற்கு ஆவணங்கள் நகல் வாங்கும் வழக்கம் கிடையாது. மேற்படி செல்வம் என்பவர் எந்த தேதி முதல் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்சொன்ன செல்வம் என்பவருக்குரிய கணக்கு துவங்கிய நாள் முதல் தற்போதுவரை கணக்குப்பட்டியல் கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி செல்வம் என்பவரின் மேற்படி கணக்கிற்குரிய 01.07.2020 முதல் 09.12.2022 வரை கணக்கு நகல் கொண்டு வந்துள்ளேன்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்